RPAD

**நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) சிவகங்கை அவர்களின்**

**நடவடிக்கைகள்.**

***முன்னிலை: திருமதி. இரா. காவியம் டி.சி.இ.,***

**ந.க.எண்:427/2018/சிம-3** **நாள்: 16.04.2018**

பொருள்: நகர் ஊரமைப்பு – சிவகங்கை மண்டலம் - புதுக்கோட்டை மாவட்டம் - குளத்தூர் வட்டம் - விராலிமலை ஊராட்சி ஒன்றியம் - குமாரமங்கலம் கிராமம் - நில அளவை எண்கள்:8/1A,8/3,4,20pt-இல் 28408.93சமீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (இறைவன் நகர்) அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்: 78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (ந.வ4(3) நாள்: 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்: 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (ந.வ4(3) நாள்: 13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்: 13193/2017/LA2 நாள்: 30.10.2017 மற்றும் 07.11.2017.
4. மனுதாரர் திரு.S. முருகன் அவர்களின் விண்ணப்பம் நாள்: இல்லை.

******

**உத்தரவு:**

பார்வை 1 மற்றும் 2-இல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 3-இல் கண்ட வழிகாட்டி நெறிமுறையின்படி பார்வை 4-இல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழக்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், குமாரமங்கலம் கிராமம், நில அளவை எண்கள்:8/1A,8/3,4,20pt-இல் 28408.93சமீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (இறைவன் நகர்) அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தி அம்மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ.வ.மு/நஊதுஇ(சிம)எண்:247/2018** என எண்ணிட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் (in principle approval) வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு | - | 28408.93சமீ (7.02 ஏக்கர்) |
| மொத்த மனைகள் | - | 169 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | - | 136 |
| பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மனை | - | 03 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | - | 30 |
| பொது ஒதுக்கீடு OSR திறவிடம் | - | 417.10சமீ (11.23%) |

நிபந்தனைகள்:

1. பார்வை 1 மற்றும் 2-இல் கண்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளபடி மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகளில் 30 மனைகளுக்கு மனை ஒன்றுக்கு ரூ.500/- வீதம் 30X500=15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) கூராய்வு கட்டணம் (Scrutiny Fees) பெறப்பட்டுள்ளது. இதர மனைகளுக்கும் கூராய்வு கட்டணம் www.tnlayoutreg.in என்ற இணையதளத்தில் மனை ஒன்றுக்கு ரூ.500/- வீதம் செலுத்தப்பட்ட இரசீதினை பெற்றுக்கொண்டு வரன் முறைப்படுத்தப்பட **வேண்டும்.**

2. வரன்முறைப்படுத்துதல் **கட்டணம்** ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு **ரூ.30/- வீதம்** கீழ்க்கண்ட அரசு கணக்கில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை மண்டல அலுவலகத்தில் கீழ்க்காணும் தலைப்பினை ஊர்ஜிதம் செய்தபின் கருவூலத்தில் தொகை செலுத்தப்பட வேண்டும்.

   **Regularisation Charges Head of Account:**
   0217 - Urban Development 60 - Other Urban Development Schemes
   800 - Other receipts AT-Receipt under Regularisation charges of
   Unapproved layouts and plots DTCP
   **(DPC: 0217-60-800-AT-0007)**

3. வளர்ச்சிக் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு **ரூ.25/- வீதம்** உள்ளாட்சியின் தனிக்கணக்கில் பெற்ற பின்னரே இம்மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. தொகைகள் மற்றும் கட்டணங்கள் செலுத்துவதற்கான கேட்பு அறிவிப்பு பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரர் கேட்பு அறிவிப்பின்படி கேட்பு அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அனைத்துத் தொகைகள் மற்றும் கட்டணங்களை தகுதி வாய்ந்த அதிகாரியிடம் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட கால அளவிற்குள் கட்டணங்கள் செலுத்தப்படாவிடில் காலதாமத காலத்திற்கு, ஆண்டொன்றுக்கு 6 சதவிகித வட்டி வசூலிக்கப்படும். மேற்சொன்ன கேட்பு அறிவிப்பு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 90 நாட்களுக்குள் கட்டணங்கள் செலுத்தப்படாவிட்டால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட வேண்டும்.

5. மனைப்பிரிவில் கண்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகளை உள்ளாட்சி ஏற்றெடுக்க ஊராட்சி சட்ட விதிகளின் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

6. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்..

ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

விண்ணப்பத்தாரர் மேற்கொண்டு வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), விராலிமலை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

வரன்முறைப்படுத்திய மனைப்பிரிவின் நகல் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச்சான்று அனுப்புமாறு வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), விராலிமலை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும், மேற்படி வரன்முறைப்படுத்திய மனைப்பிரிவு வரைபடத்தினை தங்களது அலுவலக விளம்பர பலகையில் பெரிதுபடுத்தி ஒட்டி பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

**இணைப்பு:**
இரண்டு தொகுப்பு வரைபடங்கள். ..

**பெறுநர்:**
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
விராலிமலை ஊராட்சி ஒன்றியம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

**நகல்:**

1. நகர் ஊரமைப்பு ஆணையர்,
807, அண்ணாசாலை,
சென்னை – 2 அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. ஊராட்சிகளின் உதவி இயக்குநர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
புதுக்கோட்டை மாவட்டம். — வரைபடத்துடன்
3. உதவி இயக்குநர்,
நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
புதுக்கோட்டை மாவட்டம். — சாலை மற்றும் பூங்கா(OSR) பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சியின் பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.
4. வட்டாட்சியர்,
குளத்தூர்,
5. சார்பதிவாளர்
குளத்தூர். — சாலை மற்றும் பூங்கா(OSR) பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.
6. தொழில்நுட்ப வைப்பறை.
7. திரு.S. முருகன்,
23, அமராவதி தெரு,
அய்யப்பா நகர்,
திருச்சி - 620 021.

173

ந.க.தி1/0086/2016
நாள்: 11.05.2018

ஊராட்சி ஒன்றியம்,
விராலிமலை.

கடிதக்குறிப்பு

பொருள்: அனுமதியற்ற மனைபிரிவு வரைமுறைப்படுத்துதல் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், குமாரமங்களம் ஊராட்சி, குமாரமங்ளம் கிராமம் சர்வே எண்: 8/1A,8/3,4,20 இல் 28408.93 ச.மீ உள்ள (இறைவன் நகர்) அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி ஒப்புதல் அளித்தல் - தொடர்பாக,

பார்வை: 1.நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்(பொ) சிவகங்கை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.427/2018/சிம-3 நாள்:16.04.2018
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்.04.05.2018.

-0-0-0

பார்வை 1ல் காணும் நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்(பொ) சிவகங்கை அவர்களின் செயல்முறைகளின்படி விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் குமாரமங்களம் ஊராட்சியில் குமாரமங்களம் கிராமம் சர்வே எண் 8/1A, 8/3,4,20 இல் 28408.93 ச.மீ உள்ள (இறைவன் நகர்) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரைமுறைபடுத்தி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு அம்மனைப்பிரிவினை ம.வ.வ.மு/நஊதுஇ(சிம) எண்:247/2018என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு, பார்வையில் காணும் சிவகங்கை நகர ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்(பொ) அவர்களின் செயல்முறைகளின்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் மொத்த 30 மனை எண்களுக்கு கீழ்கண்டவாறு வரைமுறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தி அதன் விவரத்தை சமர்பித்து மனைஒப்பதல் பெற்றிட தெரிவிக்கப்புட்டது.

| வ.எண் | மனை எண் | பரப்பளவு | வரைமுறைப்படுத்துதல் கட்டணம் @ ச.மீ.30 | வளர்ச்சி கட்டணம் @ ச.மீ 25 |
|---|---|---|---|---|
| 1 | 2 | 99.4 | 2982 | 2485 |
| 2 | 10 | 168.79 | 5064 | 4220 |
| 3 | 23 | 111.48 | 3344 | 2787 |
| 4 | 25 | 111.48 | 3344 | 2787 |
| 5 | 26 | 111.48 | 3344 | 2787 |
| 6 | 27 | 111.48 | 3344 | 2787 |
| 7 | 90 | 111.48 | 3344 | 2787 |
| 8 | 91 | 111.48 | 3344 | 2787 |
| 9 | 92 | 111.48 | 3344 | 2787 |
| 10 | 94 | 111.48 | 3344 | 2787 |
| 11 | 95 | 111.48 | 3344 | 2787 |
| 12 | 96 | 111.48 | 3344 | 2787 |
| 13 | 110 | 111.48 | 3344 | |

| வ.எண் | மனை எண் | பரப்பளவு | வரைமுறைப்படுத்துதல் கட்டணம் @ ச.மீ.30 | வளர்ச்சி கட்டணம் @ ச.மீ 25 |
|---|---|---|---|---|
| 14 | 112 | 111.48 | 3344 | 2787 |
| 15 | 113 | 111.48 | 3344 | 2787 |
| 16 | 121 | 88.42 | 2653 | 2211 |
| 17 | 131 | 113.11 | 3393 | 2828 |
| 18 | 145 | 111.48 | 3344 | 2787 |
| 19 | 146 | 111.48 | 3344 | 2787 |
| 20 | 147 | 111.48 | 3344 | 2787 |
| 21 | 148 | 111.48 | 3344 | 2787 |
| 22 | 149 | 111.48 | 3344 | 2787 |
| 23 | 150 | 111.48 | 3344 | 2787 |
| 24 | 151 | 111.48 | 3344 | 2787 |
| 25 | 152 | 111.48 | 3344 | 2787 |
| 26 | 156 | 111.48 | 3344 | 2787 |
| 27 | 160 | 87.12 | 2614 | 2178 |
| 28 | 161 | 115.20 | 3456 | 2880 |
| 29 | 164 | 124.02 | 3721 | 3101 |
| 30 | 165 | 126.35 | 3791 | 3159 |
| | கூடுதல் | 3374.97 | 101249 | 84374 |

அதன்படி மேற்கண்டவாறு தொடர்புடைய ஊராட்சிகளிலும் மற்றும் அரசு தலைப்பிலும் உரிய தொகையினை செலுத்தி அதன் நகலினை சமர்பித்துள்ளார் எனவே மேற்காணும் 30 மனை எண்களுக்கு மட்டும் மனை அனுமதி ஒப்புதல் இதன் வழி வழங்கப்படுகிறது.

11/5/18

வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ)
/(கி.ஊ) பொறுப்பு
ஊராட்சிஒன்றியம்,விராலிமலை

11/5/18

பெறுதல்:
திரு.S.முருகன்,
23, அமராவதி தெரு,
அய்யப்பா நகர்,
திருச்சி -620 021.

நகல்:
ஊராட்சி செயலர்,
குமாரமங்களம்